பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 16 திங்கட்கிழமை 01.08.2022 கதிர் 269

### இனி இது ரகசியம் அல்ல!

தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி கருதி இரண்டு மூத்த செயலாளர்களை மாகாணத்துக்கு வெளியே தூக்கிக் கடாசும் ஆளுநரின் நடவடிக்கை கடைசியில் இப்படித் தானாகும் என்பதைக் கோடி காட்டவே 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' 2

# ரணிலுக்குக் கூட்டமைப்பினர் வாக்களித்தனரா? வெறும் அபத்தப் பிரசாரம் என்கிறார் சுமந்திரன்!



(கல்லடி நிருபர்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் 5 பேர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு வாக்களித்தார் என ஹரீன்பெர்ணாண்டோ கருத்து வெளியிட்டிருந்தார். இந் நிலையில் அவர்களின் பெயர்களை வெளியிடுமாறு சவால் விடுக்கிறேன்.

– தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு பகிரங்கமாக தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி தொடர்பாக மட்டக்களப்பில் பொதுமக்களுடனான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

சுமந்திரன் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

நாட்டில் பாரியதொரு குழப்ப நிலை நிலவுகிறது. இதற்கு பொருளாதார 2

## சர்வகட்சி அரசு உருவாக்கும் விடயத்தில்

# நடைமுறைச் சாத்தியமாக தமிழர் செயற்படவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் அழைப்பு

இலங்கைமக்கள் அனைவரும் பெரும்பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ள சவாலான சூழலிருந்து மீள்வதற்கு கட்சிகள் அனைத்தும் தமக்கிடையேயான அரசியல் காழ்ப்புணர்ச்சிகளை கடந்து ஓரணியாகச் செயலாற்ற முன்வர வேண்டும் என்று கடற்றொழில் அமைச்சரும், ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். 2

## அருட்தந்தையைத் தேடி தேவாலயத்தில் சோதனை

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களின் முக்கிய நபர்களில் ஒருவராக கருதப்படும் கத்தோலிக்க மதகுருவை தேடி கிறிஸ்தவ தேவாலயமொன்றில் பொலிஸார் சோதனை 4



## இரு மூத்த செயலாளர்களை மாகாணத்தை விட்டே அகற்றும் ஆளுநரின் முயற்சிக்கு மேலிருந்து தடை!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஓக. 01

வடக்கு மாகாணத்தின் இரு மூத்த செயலாளர்களையும் மாகாணத்திற்கு வெளியே அனுப்பும் தீர்மானத்தை டிசம்பர் வரை ஒத்தி வைக்குமாறு ஜனாதிபதி செயலகம் உத்தரவு பிறப்பித்துள்ளது என நம்பகரமாக அறிய வந்தது.

வடக்கின் இரு மூத்த செயலாளர்களை மாகாணத்திற்கு வேண்டாம் என ஆளுநர் ஜீவன் தியாகராஜா கடந்த 26ஆம் திகதி கடிதம் வழங்கியமையைக் கண்டித்தும் ஆட்சேபித்தும் ஜனாதிபதியின் செயலாளருக்கு அவசர கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

வடக்கின் மூத்த செயலாளர்களான இ.இளங்கோவன் 4

## எரிபொருளின் விலைகள் மீண்டும் இன்று குறையும்?

எரிபொருளின் விலைகளில் மீண்டும் இன்று நள்ளிரவிலிருந்து மாற்றங்கள் ஏற்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய, 50 முதல் 100 ரூபா வரை எரிபொருளின் விலை குறைவடையலாம் என எரிபொருள் கூட்டுதாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


இந்தவிலைக்குறைப்பானது இன்று நள்ளிரவிலிருந்து 2

## பஸ் விபத்தில் இளைஞன் பலி



மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி மொறக்கொட்டாஞ்சேனை 4

## வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் சுட்டும் வெட்டியும் படுகொலை!





வவுனியா, ஆச்சிபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒரு கட்டுதுவக்கால் சுடப்பட்டும், வாளால் வெட்டப்பட்டும் 2

## காலிமுகத்திடல் போராட்டம்; நுவரெலியாவில் ஐவர் கைது!

கொழும்பு – காலிமுகத்திடல் போராட்டக்களத்துடன் தொடர்புடைய ஐவர் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என நுவரெலியா பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்துக்குள் நுழைந்து பொருள்களுக்கு சேதம் விளைவித்தமைக்கு எதிராகவே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைதுசெய்வதற்கு நுவரெலியா நீதிமன்றத்தில் உத்தரவு 4

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சந்தேகநபர்கள் இன்னமும் அரசியலிலும் அரச சேவையிலிலும்

### விசனம் தெரிவிக்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சந்தேகநபர்கள் இன்னமும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர், பொலிஸ் உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர் என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் நாட்டின் செல்வாக்கு மிக்கநபர்கள் காணப்படுவதால் அது குறித்த உண்மைகள் மூடிமறைக்கப்பட்டுள்ளன என கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

2019 இல் மூன்று தேவாலயங்களிலும் ஹோட்டல் 2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்ற பழமொழி வாக்கியத்தோடு நேற்று இப்பத்தியை ஆரம்பித்து பிரஸ்தாபித்திருந்தேன். அப்படியே விடயம் நடக்கிறது. இப்போது மேலும் சில பழமொழிகளைச் சொல்வது பொருத்தமானது என நினைக்கிறேன். 'நுணலும் தன் வாயால் கெடும்', 'தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்ட வேலை','ஆப்பிழுத்த குரங்கின் கதை' – இப்படிப் பல பழமொழிகளைச் சொல்வது பொருத்தம் என்றாகி இருக்கின்றது விவகாரம்.

புதிய ஜனாதிபதி. புதிய நிர்வாகக் கட்டமைப்பு. அதற்கிடையே தேவையில்லாத ஒரு பிரச்சினையை இப்போது தொடங்கியமையால் ஆளுநரோடு புதிய ஜனாதிபதியின் கட்டமைப்பு நேரடியாகத் தொடர்பாடல் செய்ய வேண்டிய நிலைமை. இந்த மனிதரோடு எப்படி விடயங்களைத் தொடர்வது என்று மலைத்து நிற்கும் நிலைமைகொழும்புக்குஏற்பட்டிருப்பதாக உள் வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

மாகாண நீதியான நிர்வாக முடிவுகள் விரைவில்எடுக்கப்படும்போது, இப்போது விடயங்களைக் கையாண்ட விவகாரம் முக்கியத்துவம் பெறுமெனத் தெரிகிறது. மீண்டும் அரச சார்பற்ற தொண்டு நிறுவனத்துக்கு பொருத்தமான அதிகாரி பணிக்குத் திரும்பும் நிலை ஏற்படும்.

மூத்த செயலாளர்களில் ஒருவரான இளங்கோவை மாகாண நிர்வாகத்தில் இருந்து வெளியே அனுப்பினால், உடனடியாக அடுத்த வாரம் வருகின்ற அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய அமைச்சரவை பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து, அவரை யாழ் மாவட்ட அரச அதிபராகக் கொண்டு வந்து அமர்த்தும் திட்டமொன்றைக் கூட முன்னெடுக்க அரச உயர் வட்டாரங்கள் திட்டமிட்டிருந்தன என ஒரு தகவல் தெரிய வந்தது.

'ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள் வீழ்த்தும்' திட்டம் இது. ஒரு புறம் மாகாணத்தை விட்டு ஆளுநர் அனுப்பியவரை மாவட்ட செயலாளராக அவருக்கு முன்னால் கொண்டு வந்து இருத்துவது. அடுத்தது – அமுல் பேபிக்கு சலாம் வைத்து, ஆவலட்டம் பிடித்தவரை வேறு இடத்துக்கு மாற்றுவது.

அரசியல் ராஜதந்திரங்கள் எப்படி எல்லாம் நகர்கின்றன...?

★ ★ ★

2015 ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களை வீட்டுக்கு அனுப்பும் முயற்சியில் புதுடெல்லி காத்திரமாகப் பங்களித்தது என்பது பரகசியமான விடயம். இதையொட்டி இந்தியாவின் மீது கடும் சீற்றத்தோடு தேர்தலில் தோல்வியுற்ற மஹிந்த ராஜபக்ஷ அச்சமயம் கருத்து வெளியிட்டார் என்பதும் தெரிந்ததுதான்.

மஹிந்தவை வீட்டுக்கு அனுப்பியாக வேண்டும் என்ற என்ற தீர்க்கமான முடிவுக்கு அப்போது புதுடில்லி வந்தமைக்கு முக்கிய காரணம் சீனாவின் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் வந்து தரித்துச் செயற்பட்டுச் செல்வதற்குக் கொழும்பு அனுமதித்திருப்பதான முடிவுதான். இதையொட்டி புதுடெல்லி தெரிவித்த பாதுகாப்பு ஆட்சேபத்தை அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ உதாசீனத்துடன் கையாண்டமை ராஜபக்ஷக்களை அதிகாரத்தில் இருந்து துரத்த வேண்டும் என்ற நெருக்கடிக் கட்டத்துக்குப் புதுடெல்லியை தள்ளியது என்பது அப்போதைய விடயங்களைக்கையாண்டதரப்புகளுக்கு நன்குதெரியும்.இப்போதும்அதேபோன்ற கப்பல் சிக்கலில் ரணில் அரசு மாட்டிக் கொண்டிருக்கின்றது. இந்தியாவின் கடும் ஆட்சேபனையையும் மீறி அம்பாந்தோட்டத்தை துறைமுகத்தில் சீனப் பாதுகாப்போடு தொடர்புடைய கப்பல் தரித்துச் செயற்பட்டுச் செல்வதற்கு ரணில் அரசு வழங்கி இருக்கும் அனுமதி, புதுடெல்லியை கடும் அதிருப்திக்குள் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகிறது. விளைவு என்ன ஆகும் என்று இப்போது ஊகிக்க முடியாது.

★ ★ ★

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தேச சர்வ கட்சி அரசில் ஆளும் பொதுஜனப் பெரமுனவின் தரப்பில் யார் யாருக்கு அமைச்சர் பதவி கொடுப்பது என்பது ரணிலின் சிண்டையைப் பிய்க்கும் விவகாரமாக அமையும் என்பது இப்போதே தெரிகிறது.

தங்களது கூட்டமைப்பில் மாவட்ட ரீதியான வேட்பாளர் பட்டியலின் தலைவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும் என்று மொட்டுக்கட்சி, நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் பார்த்தால் நாமல் ராஜபக்ஷ (அம்பாந்தோட்டை), சசிந்தர ராஜபக்ஷ (மொனறாகலை), ஜோன்ஸ்டன் பெனான்டோ (குருநாகல்) போன்றவர்களுக்கும் அமைச்சர் பதவி கொடுக்க வேண்டி இருக்கும். மீண்டும், ஜனாதிபதி பதவியில் இருப்பவருக்கு வீதியில் போகும் பாம்பை பிடித்து மடியில் கட்டும் வேலையை செய்யத் தூண்டுகிறார்கள்.

என்ன செய்யப் போகிறார் ரணில்? பார்ப்போம்.

– மின்னல் –

## நடைமுறைச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சக தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அவர் விடுத்துள்ள அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள சர்வ கட்சி அரசொன்றை அமைத்து முன்னோக்கி செல்வதன் ஊடாகவே சிறந்த பெறுபேறை பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதற்கான அழைப்பையும் சர்வ கட்சிகளுக்கும் எழுத்து மூலம் கடிதமாக அனுப்பி வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் அந்த அழைப்பை ஈ.பி.டி.பி. வரவேற்பது மாத்திரமல்லாது அந்த நோக்கம் செயல்வடிவம் பெறுவதற்கான பங்களிப்பையும் செய்துவருகின்றது. இந்த நிலையில் சர்வ கட்சியில் பங்கெடுப்பதும், சர்வகட்சி அரசொன்றின் எதிர்கால வேலைத்திட்டத்தில், மூன்று தசாப்தத்திற்கும் மேலாக கொடிய யுத்த வன்முறைக்கு முகம் கொடுத்து பல வழிகளிலும் இழப்புக்களைச் சந்தித்துள்ள தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கும் வேலைத்திட்டங்களையும் வகுத்துக்கொண்டு ஒரு தேசிய இனமாக நாமும் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.

எனவே தமிழ் அரசியல் கட்சிகள் இலங்கையின் தற்போதைய அரசியல் செல் நெறியை சரியாகக் கணித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்.

சர்வ கட்சி அரசை வரவேற்கும் அதே வேளை அதற்கு முரண்பாடான நிபந்தனைகளை விடுப்பதும், குழப்பத்தில் அரசியல் லாபம் தேடும் உள்நோக்கத்தோடும் தீர்மானங்களை எடுப்பதும் மீண்டும் ஒரு முறை தமிழ் மக்களை அரசியல் ரீதியாக தோற்கடிக்கச் செய்ததாகவே அமையும்.

எனவே ஏனைய தமிழ்க்கட்சிகள் தமது வழமையான எதிர்ப்பு அரசியல் எனும் சமகாலத்திற்கு பொருத்தமற்ற அரசியல் போக்கைக் கைவிட்டு, ஈ.பி.டி.பியாகிய நாம் தொடர்ந்தும் கூறிவரும் நடைமுறைச் சாத்தியமான அரசியல் வழிமுறைக்கு வருவது காலத்தின் அவசியமாகும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.– என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்குக் கூட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சிக்கல் மற்றும் அரசியல் சிக்கலைக் காரணங்களாகக் கூறலாம். இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. அவற்றை ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாது. இந்த விடயத்தில் பொருளாதார சிக்கல் ஆரம்பத்தில் வந்தபோது, சில கருத்துக்கள் தமிழ்ப் பிரதேசத்திலிருந்து வந்தமையைச் நானறிவேன். இது தென்னிலங்கைப் பிரச்சினை எனக் கூறியவர்கள் இன்று அது முழுநாட்டுக்குமான பிரச்சினை என்பதை உணரத் தலைப்பட்டுள்ளனர். இந்நிலையில் அடுத்ததாக உள்ள அரசியல் பிரச்சினை எனும் போது மத்திய அரசாங்கத்தின் பிரச்சினை. மத்திய அரசாங்கம்தான் நாடு முழுவதையும் நிர்வகிக்கிறது. மத்திய அரசாங்கத்தோடு தொடர்பில்லாமல் இருக்க வேண்டுமெனக் கூறுவது பொருத்தமற்றதொன்று. விசேமாக அநீதிக்கெதிராகப் போராடும் நாங்கள் மற்ற மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

நாட்டில் பொருளாதாரப் பிரச்சினை ஏற்படக் காரணம் வெளிநாடுகளிமிருந்து கூடுதலாகக் கடன் பெற்றமையே யாகும். கடனை அடைப்பதற்கு வரவு செலவுத் திட்டத்தில் 74 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஆனால் 2020 ஆண்டு ஓகஸ்ட் மாதம் கடன்பெற முடியாத நிலை ஏற்பட்டது. கோட்டபாய ராஜபக்ஷ வரிச்சலுகையளிப்பதாகக் கூறினார். இதுவும் பொருளாதாரச் சிக்கல் உருவாக வித்திட்டது.

இதன் காரணமாகவே அவரை வெளியேறச் சொல்லி 'கோட்டா கோ ஹோம்' உருவானது. ஆனால் தான் 69 இலட்சம் வாக்குகள் பெற்றார் எனப் பெருமிதமாகப் பேசிக் கொண்டிருந்தார் அவர். அடுத்த வருடம் பொதுத் தேர்தலில் அதே மொட்டுக் கட்சி 146 ஆசனங்களுடன் ஆட்சியமைத்தது. இந்நிலையில் ஓரிருவரைக் காசு கொடுத்து வாங்கி 150 ஆசனங்களைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அவரது தமையன் மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கினார். இந்நிலையில் மக்கள் தன்னெழுச்சியாக ஒன்றிணைந்து மே 9 இல் ஜனாதிபதியை நாட்டை விட்டு ஓடச் செய்தனர். இது நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் உருவானதல்ல. மாறாக மக்கள் உணர்வு வெளிப்பாட்டின் மூலம் அரங்கேறியது. வன்முறையற்ற போராட்டமாக அரங்கேறியது இலங்கையில் மட்டும்தான். புத்தியைப் பாவித்து மேற்கொள்ளப்பட்ட போராட்டமாக அமைந்தது. இந்நிலையில் ஹெலிக்கொப்டரைத் தலைக்கு மேலாகப் போராட்டம் இடம்பெற்ற போது பறக்கச் செய்து மக்களை அச்சமடையச் செய்யலாம் என ரணில் விக்கிரமசிங்க நினைத்திருந்தார்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் பட்டங்களைப் பறக்கச் செய்தனர். இதனால்ஹெலிக்கொப்டர்கள் அவ்விடத்தை விட்டு அகற்றப்பட்டன. சரியான திட்டமிடலுடன், உரியவாறு செய்து முடிக்கப்பட்டுள்ளது. கத்தியின்றி, இரத்தமின்றி, நாடாளுமன்ற நடைமுறையுமின்றி மக்களால் உன்னதமாக நடத்தப்பட்ட போராட்டமாக உலக நாடுகளால் அது பார்க்கப்படுகிறது

மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து ஒரு செய்தி எமக்கு கடந்த சில நாளர்களுக்கு முன்பு வந்தது. அதன்படி நாட்டைத் தொடர்ந்து எம்மால் நிர்வகிக்க முடியாது விட்டால், ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்போம். அவர் பத்திரமாக அதனை வைத்திருந்து மீண்டும் அதனை எம்மிடமே ஒப் படைப்பார். இந்தச் செய்தியை நாம் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தோம். இந்நிலையில் மொட்டுக்கட்சிக்கு 3 சதவீதமே ஆதரவு இருப்பதாகக் கருத்துக் கணிப்பு உணர்த்தியுள்ளது. முற்று முழுதாக மக்கள் ஆதரவை இழந்த நிலையில், அவர்களின் பெரும் பான்மை உள்ள நாடாளுமன்றம் மூலம் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டனர்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகள் எல்லோரும் சேர்ந்து சர்வகட்சி ஆட்சியமைக்க வந்தவரை ஆதரிப்பதென முடிவினை மேற்கொண்டோம். இதன்படி பகிரங்கமாக அறிவித்த கட்சிகளிடமிருந்து முழுமையான ஆதரவு கிடைத்திருந்தால் டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாக அரியாசனத்தில் அமர்ந்திருப்பார். – என்றார்.

## உயிர்த்த ஞாயிறுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

களிலும் குண்டைவெடிக்கவைத்தவர்கள் இன்னமும் அரசியலில் ஈடுபட்டுள்ளனர். பொலிஸ் உத்தியோகத்தர்களாக பணியாற்றுகின்றனர். இதன் காரணமாக நீதிக்கான எங்கள் அழுகுரல்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன, நீதி கிடைக்கவேண்டும் என கத்தோலிக்கர்களாகிய நாங்கள் தொடர்ந்தும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டமை தொடர்பில் உரிய விசாரணைகள் இடம்பெறவில்லை. முன்னைய அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க நபர்களும் பாதுகாப்பு திணைக்களத்தை சேர்ந்தவர்களுமே தேவாலயத்தில் கைக்குண்டை வைத்தனர். எனினும் தேவாலயத்தை பராமரிப்பவர்கள் உட்பட அப்பாவிகள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் கையொப்பங்களை பலவந்தப்படுத்தி சில ஆவணங்களில் பெற்றுக்கொண்டார்கள். – எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஆச்சிபுரம் பகுதியை சேர்ந்த ரஞ்சா என அழைக்கப்பட்ட ஜோன்சன் என்ற 30 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்,

நேற்று மாலை அந்தப் பகுதிக்கு சென்ற ஆயுதம் தாங்கிய குழு ஒன்று அவரைத் தாக்கியதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது கட்டுத்துவக்கினால் அவர் மீது சுடப்பட்டுள்ளதாகவும், அதன் பின் வாளால் அவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த இளம் குடும்பஸ்தரது உடலில் பலத்த வெட்டு காயங்கள் காணப்படுகின்றன. ஒரு கை முற்றாகத் துண்டிக்கப்பட்டு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று காணப்படுவதாக சிதம்பரபுரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில். சடலம் சட்டவைத்தியரின் பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையின் பிரதே அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக சிதம்பரபுரம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## எரிபொருளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அமுலுக்கு வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக சந்தையில் எரிபொருளின் விலை வீழ்ச்சிக்கு அமைய, இலங்கையிலும் எரிபொருள்களின் விலை குறைக்கப்படவுள்ளதாக எரிபொருள் கூட்டுதாபனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வீணர்களின் வேலை

நாடாளுமன்றம் வேறு, நீதிமன்றம் வேறு.

ஒன்று சட்டத்தை யாக்கும் இடம். மற்றையது சட்டத்தை நிலைநிறுத்தும் தளம்.

நாடாளுமன்றத்தில் பேசப்படுவது இராஜதந்திரம். நீதிமன்றத்தில் வாதிடப்படுவது சட்டம்.

இரண்டு அணுகுமுறைகளுமே வெளித் தோற்றத்துக்கு ஒரே மாதிரியானவை போன்று தென்பட்டாலும் அவை வித்தியாசமானவை. வேறுபட்டவை.

நீதிமன்றத்திலேயே பல சமயங்களில் நீதியும், நியாயமும் தடுமாறும் போது, தந்திரோபாயங்களும், சாணக்கியங்களும், நரித் தந்திரங்களும் கட்டவிழும் நாடாளுமன்றத்தின் நிலைமையைச் சொல்லத் தேவையில்லை.

இந்த யதார்த்தம் புரியாமல் நீதி, நியாயம் என்று பொருத்தமற்ற தளங்களில், புத்துசாதுரியமற்ற அணுகுமுறைகளை மேற்கொண்டு, தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை முட்டுச் சந்தியில் கொண்டு போய் மாட்டியிருக்கின்றது தமிழர் தலைமை என்றே தோன்றுகின்றது.

கிடைக்கும் வாய்ப்பை – பொன்னான சந்தர்ப்பத்தை – சரிவரப் பயன்படுத்தத் தவறுகின்ற தலைவன் முட்டாள் மாத்திரமல்லன், தான் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றானோ அந்த மக்களை நட்டாற்றில் விட்ட பொறுப்பற்ற மீகாமனுமாவான்.

தமிழர் தலைமைகள் தத்தமது நெஞ்சைத் தொட்டுப் பார்த்து, மீளத் திரும்பி நோக்கி, தங்களின் பொறுப்பற்ற போக்கினால் தமிழினத்துக்குத் தாம் இழைத்துள்ள தவறைச் சிந்திக்க வேண்டிய வேளை இது.

ரணில் விக்கிரமசிங்க குறித்து நீதிமன்றத்தில் சட்டவாதம், நீதி, நியாயம் பிளப்பது போல, தளம் தெரியாமல் முட்டாள்தனமாக விமர்சித்து வரும் நமது தமிழ்த் தலைமைகள் ஒரு விடயத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு காலத்தை நாட்டை ஆட்டிப்படைத்த அவரின் ஐ.தே. கட்சி, பின்னர் அண்மைக் காலங்களில் உள்கட்சி மோதல்கள், முரண்பாடுகள், கால்வாரல்கள், பின்முதுகுக் குத்துக்கள் காரணமாக அரசியல் குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது. இருநூற்றி இருபத்தியைந்து உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தேசியப் பட்டியல் மூலம் ஒரெயொரு இடம். பத்து மாதம் கழித்துத்தான் அந்த இடத்துக்கு எம்.பியாக வந்தார் ரணில் விக்கிரமசிங்க.

நாட்டில் கட்டவிழ்ந்த அரசியல் நிலைவரங்ளைச் சாதகமாகப் பயன்படுத்தி, தந்திரோபாயமாகக் காய் நகர்த்தி, சாணக்கியமாக அடிகளை எடுத்து வைத்து, அந்த ஓர் ஆசனத்தையும் வைத்துக் கொண்டு நாட்டின் ஜனாதிபதியாகி விட்டார் ரணில். தனது அந்த ஆசனத்துக்கு தமது கட்சியில் இன்னொருவரை நியமித்து அவரை அமைச்சராக்கப் போகின்றார். தமது கட்சிக்குக் கால்வாரி சஜித் அணி பக்கம் பாய்ந்த பலரை வளைத்து எடுத்து, கட்சியின் நிலையை நாடாளுமன்றுக்குள்ளேயே மேலும் ஸ்திரப்படுத்துகின்றார்.

ரணில் செய்தவை, சரியா பிழையா, நீதியானவையா, தார்மீகத்தின்பால்பட்டவையா என்ற கேள்வி எல்லாம் இங்கு முக்கியமல்ல. வீழ்ந்த தமது கட்சியையயும் தனது அரசியல் நிலையையும் இராஜதந்திரம் மூலம் உச்சத்துக்குத் தூக்கி நிறுத்தியிருக்கின்றார் ரணில் என்பதுதான் இறுதி முடிவு.

இப்படி ஒரு நல்ல காரியத்தை இராஜதந்திரம் மூலம், தந்திரோபாயமாகத் தமிழருக்கு ஆற்றுங்கள் என்று தமிழர்கள் அனுப்பி வைத்த பிரதிநிதிகள், அங்கு கோமா நிலையில் இருக்கின்றார்கள் அல்லது நீதி, நியாயம் என்று நீதிமன்றம் போல சட்டம் பிளந்து, தமிழர் எதிர்காலத்தை நட்டாற்றில் விட்டிருக்கின்றார்கள்.

கிடைத்த வாய்ப்பைக் குதர்க்கம் பேசிக் குழப்பி வீணடிக்கும் இந்த வீணர்களின் போக்கை வரலாறு மன்னிக்காது. இனியும் இவர்கள் தம்மை விரைந்து திருத்தாது விட்டால் வரலாறு திருத்தும்.

# தீர்வுக்கு ரணிலுடன் பேசவும் தயார் என்கின்றார் சிறிதரன்

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுடனும் பேசத்தயாராகவே நாங்கள் இருக்கிறோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி இராமநாதபுரம் வட்டாரத்தில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மக்களுடனான சந்திப்பு நடைபெற்றது. அந்தச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

இந்த மண்ணிலே புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக யார் இருந்தாலும் நாங்கள் பேசுவோம். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடும் நாம் பேசுவோம்.

ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 19 தடவைகள் பேசியிருக்கிறோம். கோட்டாபய ராஜபக்ஷவுடனும் ஒரு தடவை பேசியிருக்கிறோம். இவ்வாறு இந்த நாட்டில் யார் யார் எல்லாம் ஜனாதிபதியாக இருந்திருக்கிறார்களோ அவர்களுடன் எல்லாம் தமிழர் தரப்பு பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 3 ஆம் திகதியன்று நாடாளுமன்றில் தனது அக்கிராசன உரையை நிகழ்த்தவுள்ளார். இவர் தனது அக்கிராசன உரையில் புரையோடிப் போயிருக்கிற இனப்பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிப்பாரா? அல்லது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்று அநுராதபுரத்தில் பதவியேற்ற போதும் சரி தனது அக்கிராசன உரையிலும் சரி மக்களால் விரட்டியடிக்கப்படும் வரை தமிழர்களின் பிரச்சினை தொடர்பில் ஒரு வார்த்தை கூடப் பேசாதமை போன்று இவரும் செயற்படுவாரா? எனும் சந்தேகம் இப்போது எழுந்திருக்கிறது.

40 வருடங்களுக்கு மேலான அரசியல் அனுபவத்தை கொண்டுள்ள ஜனாதிபதி இந்த நாடு இப்படி பொருளாதார ரீதியில் அதளபாதாளத்துக்குப் போவதற்கு பிரதான காரணமாக இருந்தது ஓர் இனத்தின் மீது நடைபெற்ற போர்தான் என்பதை புரிந்து வைத்திருப்பார். எம் மீது நடைபெற்ற இன வழிப்பின் பங்காளியாக இருந்தவர் எமது விடுதலைப் போராட்டத்தை சூழ்ச்சியால் பிரித்த ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பொருளாதார நிலையைச் சீர் செய்ய வேண்டும் என்றால் முதலில் இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் சமகால அரசியல் தொடர்பிலும் பொருளாதார பிரச்சினை தொடர்பிலும் கல ந்துரையாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுடன் வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜாவும் கலந்து கொண்டார்.

## பஸ் விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விஷ்ணு ஆலையத்துக்கு அருகில் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று வீதியால் நடந்து சென்ற இளைஞன் ஒருவர் மீது மோதியதில்அந்த இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளான்.

நேற்று முன்தினம் இரவு 11 மணி அளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக சந்திவெளிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மாவடிவேம்பு 2 ம் பிரிவைச்சேர்ந்த 27 வயதுடைய வேணுகோபாலன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்தையடுத்து சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார் பஸ் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

## இரு மூத்த செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் செந்தில்நந்தனன் ஆகியோருடன் விவசாயப் பணிப்பாளர் சிவகுமார் ஆகிய மூவரையும் ஆளுநர் ஜீவன் தியாகராஜா தூக்கியெறிந்தமை ஒரு தவறான முன்னுதாரணம் எனவும், குறிப்பாக நிர்வாக நடைமுறைக்கு முரணாக மேற்கொண்ட இந்த விடுவிப்பு உத்தரவுகள் உடன் இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் ஜனாதிபதியின் செயலாளருக்கு அவசர கடிதம் அனுப்பி வைத்தனர்.

ஒரே தடவையில் அதிக அதிகாரிகளை மாகாணத்திற்கு வெளியே அனுப்புவது மாகாணத்தின் பணியைப் பாதிக்கும் செயல் என்பதோடு, ஏனைய அதிகாரிகளையும் மனதளவில் பாதிக்கும் செயலாகவும் அமையும், அத்தோடு நாடளாவிய சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம், விடுவிப்பு என்பன தொடர்பில் ஆளுநர் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கு பரிந்துரைக்க மட்டுமே முடியுமே அன்றி , நேரடியாக இடமாற்ற உத்தரவுக் கடிதம் வழங்க முடியாது என்பதனையும் கருத்தில்கொள்ளுமாறு தொலைபேசியிலும், எழுத்திலும் முறையிடப்பட்டது.

இவற்றை உடன் தாம் கவனத்தில் எடுப்பார் என ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்திருந்த நிலைமையில், நேற்று இரவு இந்த விடயத்தை ஆறு மாதங்களுக்கு அப்படியே தள்ளிப் போடும்படி தெரிவிக்கும் உத்தரவு தொலைபேசியில் சம்பந்தப்பட்ட தரப்புக்கு வழங்கப்பட்டதாகவும், இந்த உத்தரவு இன்று வடக்கின் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவிற்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது எனவும் தெரியவந்தது.

இதற்கமைய கடந்த ஒரு வாரமாக நீடித்த நிர்வாகச் சர்ச்சைக்கு ஓர் இடைக்கால தீர்வு எட்டப்பட்டுள்ளதோடு, விரைவில் ஒரு மாறுபட்ட நிரந்தர தீர்விற்கும் முயற்சிக்கப்படுகின்றது என்று கூறப்பட்டது.

## காலிமுகத்திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெறப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இதற்கமைய அந்த சந்தேக நபரை கைதுசெய்வதற்கு அவரது வீட்டுக்கு சென்ற பொலிஸார், அங்கு மேலும் 4 பேர் மறைந்திருப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் போது, அவர்களும் இந்தத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பிங்கிரிய, கொதட்டுவ, களுத்துறை மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர்கள் நுவரெலியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## அருட்தந்தையைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கு மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கிறிஸ்தவ மதகுருமார்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றிற்குச்சென்றபொலிஸார்கிறிஸ்தவமதகுரு அருட்தந்தை அமிலஜீவந்த பீரிஸ் அங்கிருக்கின்றாரா என சோதனையில் ஈடுபட்டனர் என ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜூன் ஆர்ப்பாட்டங்களின் போது சட்ட விரோதமாக ஒன்றுகூடியமை, பொதுச் சொத்திற்குச் சேதம் விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 45 வயது கிறிஸ்தவ மதகுருவும் ஏனைய ஐவரும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு நீதிமன்றம் தடைவிதித்து இரண்டு நாள்களின் பின்னர் இந்தச் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

கொழும்பு காலிமுகத்திடலில் இடம் பெற்ற – அரசாங்கத்திற்கு எதிரான – ஆர்ப்பாட்டங்களின் முன்னணியில் இந்த அருட்தந்தை காணப்பட்டார்.

அருட்தந்தைபீரிஸிற்குஎதிரானபொலிஸ் நடவடிக்கைகள் முற்றாக ஏற்றுக்கொள்ள முடியாதவை என மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்ணாண்டோ தெரிவித்தார். இனரீதியாக பிளவுபட்டுள்ள இலங்கையின் தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தினால் மோசமாக பாதிக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள் அதிகமாக வாழும் வடக்கு,கிழக்கு சமூகங்கள் மத்தியில் பணியாற்றிய மிகக்குறைந்தளவு எண்ணிக்கையிலான சிங்கள மதகுருமார்களில் ஜீவந்த பீரிஸும் ஒருவர் என ருக்கி பெர்ணான்டோ தெரிவித்தார்.

# குரங்கு அம்மை வைரஸைத் தனிமைப்படுத்தி பிரித்தெடுப்பதில் வெற்றி எட்டியது இந்தியா

## தடுப்பூசி தயாரிப்பில் முதல் கட்ட சாதனை நகர்வு

- சௌமியா பிள்ளை -



புனேவில் உள்ள இந்திய தேசிய வைராலஜி நிறுவனம் கடந்த புதன்கிழமையன்று, நோயாளியின் மருத்துவ மாதிரியிலிருந்து குரங்கு அம்மை வைரஸைத் தனிமைப்படுத்திப் பிரித்தெடுப்பதில் வெற்றி கண்டிருப்பதாக அறிவித்துள்ளது.

இதனால், எதிர்காலத்தில் இந்த வைரஸுக்குத் தடுப்பூசி தயாரிப்பதற்கான திட்டத்தில் ஒரு முக்கிய தடைக்கல் நீங்கியுள்ளது.

இந்த வெற்றிகர நடவடிக்கையால் இப்போது நாட்டில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் தடுப்பூசி மற்றும் சோதனைக் கருவிகளில் தமது ஆராய்ச்சிப் பணிகளைத் தொடங்கக் கூடிய வாய்ப்புக் கிட்டியுள்ளது.

டெனிஸ் நிறுவனத்தால் பெரியம்மைக்காக தயாரிக்கப்பட்ட ஒன்றுதான் தற்போது, குரங்கு அம்மைக்கான ஒரே உரிமம் பெற்ற தடுப்பூசியாக உள்ளது. இந்த இரண்டு நோய்களுக்கும் காரணமான நோய்க்கிருமிகளின் குடும்பம் – நேரடி வைரஸ் – வேரியோலா வைரஸ் இரண்டு இடங்களில் மட்டுமே சேமிக்கப்படுகிறது. அட்லாண்டா, ஜோர்ஜியாவில் உள்ள நோய்க் கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் ரஷ்யாவின் கோல்ட்சோவோவில் உள்ள வைராலஜி மற்றும் பயோடெக்னாலஜி மாநில ஆராய்ச்சி மையம் (VECTOR நிறுவனம்) ஆகியவையே அவை.




குரங்கு அம்மை வைரஸை தனிமைப்படுத்திப் பிரித்திருப்பது எதிர்காலத்தில் நோய் கண்டறிதல் கருவிகள் மற்றும் தடுப்பூசிகளின் வளர்ச்சிக்கு உதவும். பெரியம்மை நோய்க்கு, கடந்த காலத்தில் வெகுஜன நோய்த்தடுப்புக்கு லைவ் அட்டென்யூடட் தடுப்பூசி வெற்றிகரமாக இருந்தது. புதிய தளங்களில் இதேபோன்ற அணுகுமுறைகளை தடுப்பூசிகள் தயாரிப்பதற்கு முயற்சி செய்யலாம் என்று புனேவின் தேசிய வைராலஜி நிறுவனத்தின் மூத்த விஞ்ஞானி டாக்டர் பிரக்யா யாதவ் கூறினார்.

வைரஸ் தனிமைப்படுத்தல் அதன் நடத்தை மற்றும் அது எவ்வாறு பாதிக்கிறது, தொற்றுகின்றது என்பவற்றையும் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்வார்கள், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் பணியாற்ற உதவுவார்கள் என்று அவர் கூறினார்.

குரங்கு அம்மை வைரஸ் என்பது, மத்திய ஆபிரிக்க (காங்கோ பேசின்) கிளேட் மற்றும் மேற்கு



ஆபிரிக்க கிளேட் ஆகிய இரண்டு தனித்தனி மரபணு கிளேடுகளைக் கொண்ட ஒரு மூடிய இரட்டை இழைகள் கொண்ட டி.என்.ஏ. வைரஸ் ஆகும். (கிளேட் என்பது ஒரு பொதுவான மூதாதையரின் அனைத்து பரிணாம சந்ததியினரையும் உள்ளடக்கியதாக நம்பப்படும் உயிரினங்களின் குழுமம் ஆகும்)

இந்த வைரஸினால் பாதிக்கப்பட்ட நோயாளியின் தோல் புண்களுக்குள் இருக்கும் நிணத்தில் நோய்க்கிருமியின் செறிவு இருப்பதால், அத்திரவம் நேரடி வைரஸைத் தனிமைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது.

நோய்க்கிருமிகளை தனிமைப்படுத்துவது சவாலானது என்றும், மாசுபடாமல் இருப்பதை உறுதி செய்ய அதிநவீன வசதிகள் தேவை என்றும், அந் நடவடிக்கையில் விஞ்ஞானிகளுக்கும் நோய்த் தொற்று ஏற்படவில்லை என்றும் சுகாதார நிபுணர்கள் விளக்கினர்.

தடுப்பூசி உற்பத்திக்கு வைரஸ் தனிமைப்படுத்தும் செயல்முறையை எடுத்துக்கொள்வது மிகவும் சிக்கலானது, ஏனெனில் அதற்கு உண்மையில் அதிக உயர் – பாதுகாப்பு நிலைகள் தேவைப்படுகின்றன. உலகில் சில இடங்களில் மட்டுமே இந்த வசதிகள் உள்ளன" – என்று இந்திய பொது சுகாதார அறக்கட்டளையின் பேராசிரியரும் தலைமை லைஃப் கோர்ஸ் எபிடெமியாலஜி டாக்டர் கிரிதர் பாபு கூறினார்.

"தேசிய வைராலஜி நிறுவனத்தில் வைரஸ் தனிமைப்படுத்தப்பட்டு, பாரத் பயோடெக் மூலம் உற்பத்தி தொடங்கப்பட்ட கொவிட் – 19 விடயத்தில் அவர்கள் அதைச் செய்தார்கள். அவர்கள் ஒரே செயல்முறையைப் பின்பற்றலாம். ஆனால் ஒவ்வொரு தடுப்பூசியும் ஒரே மாதிரியாக வேலை செய்யாது, என்று அவர் மேலும் கூறினார்.

புனே தேசிய வைராலஜி நிறுவனம் 'உயிரி பாதுகாப்பு நிலை 4' (BSL 4) ஆய்வகமாக சான்றிதழ் பெற்றது, இது நேரடி வைரஸ்களைக் கையாள




அனுமதிக்கிறது.

புனே தேசிய வைராலஜி நிறுவனம் 'சார்ஸ் – CoV - 2' ஐத் தனிமைப்படுத்தியபோது, அதன் வளர்ச்சியின் ஆரம்ப நாள்களில், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்ஸில், பாரத் பயோடெக் நிறுவனத்துடன் தடுப்பூசி தயாரிக்க ஒப்பந்தம் செய்து கொண்டது, இறுதியில் அது 'கொவக்ஸின்' என தர முத்திரை குத்தப்பட்டது. அது, இப்போது நாட்டில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் தடுப்பூசி ரகங்கள் இரண்டில் ஒன்றாகும்.

இந்த ஆய்வகம் காடிலா ஹெல்த்கேர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டது, குஜராத்தைச் சேர்ந்த நிறுவனம் ZyCoV - D என்ற தடுப்பூசியை உருவாக்க அனுமதித்த Sars - CoV - 2 நோய்க்கிருமியின் விவரங்களைப் பகிர்ந்து கொண்டது.

இந்தியா உலகின் மருந்தியல் வல்லரசுகளில் ஒன்றாக உள்ளது. 'சீரம் இன்ஸ்டிடியூட் ஒவ் இந்தியா' மற்றும் 'பயோலாஜிக்கல் ஈ' போன்ற மிகப் பெரிய தடுப்பூசி உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு மாதமும் பல்வேறு தடுப்பூசி ரகங்களின் மில்லியன் கணக்கான டோஸ்களை உலகுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(மூலம்: 'ஹிண்டுஸ்தான் ரைம்ஸ்')

# பிரபாகரனின் போராட்டம் சரியானது என்பதை சிங்கள மக்கள் இன்று உணர்ந்துள்ளார்கள்!

## அரசாங்க பொது ஊழியர் சங்கம் தெரிவிப்பு




(பாறுக் ஷிஹான்)

வடக்கு ஆளுநரின் சர்வாதிகார போக்கைக் கண்டிப்பதுடன் உடனடியாக ஆளுநரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க பொது ஊழியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் சனிக்கிழமை மாலை ஊடகவியலாளர் சந்திப்பு மேற்கொண்டு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் தனது கருத்தில் அவர் குறிப்பிட்டவை வருமாறு –

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் 3 அமைச்சு செயலாளர்கள் அதிரடியாக கௌரவ ஆளுநரால் இட சர்வாதிகாரப் போக்கில் மாற்றப்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த இடமாற்றத்தை எமது தொழிற்சங்கம் கண்டிக்கின்றது. ஆளுநர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகத்தால் அரச நிர்வாக நடைமுறையைக் குழப்புகின்றார். ஆளுநரைத் தட்டிக்கேட்பதற்கு ஆள்கள் இல்லை என்ற காரணத்தால்தான் அமைச்சுக்களின் செயலாளர்களைத் தற்போது இடமாற்றியுள்ளார். நாங்கள் அமைதியாக இருப்பதால்தான் ஆளுநரால் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது தொழிற்சங்கத்தைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்கில் இருந்த முன்னாள் ஆளுநர்களுடன் மோதி இருக்கின்றோம். ஊழியர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் அநீதி இழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் எமது தொழிற்சங்கம் அதனைத் தட்டிக்கேட்டிருக்கின்றது. எமது தொழிற்சங்கம் அமைதியாக உள்ளதாகத் தற்போதைய ஆளுநர்கள் நினைக்கின்றார்கள். காலத்தின் தேவைக்கேற்ப தான் எமது தொழிற்சங்கம் குரல் கொடுக்கும். எனவே, தான் வடக்கு, கிழக்கில் சிறந்த முகாமைத்துவம் உள்ள ஆளுநர்கள் தேவையாக உள்ளது என்பது தான் எமது தொழிற்சங்கத்தின் நோக்கம்.

வெளி இடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட ஆளுநர்கள் வடக்கு கிழக்கு மாகாணத்தை நிர்வகித்தனர். இவ்வாறு வெளியிடங்களில் இருந்து ஆளுநர்களை இறக்குமதி செய்வதால் தான் சர்வதிகார போக்கு நிகழ்கின்றது. தற்போதைய ஆளுநர்களை உடனடியாக நீக்கி விட்டு வெளியிடங்களில் இருந்து ஆளுநர்களை நியமிக்காது வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்களை ஆளுநர்களாக நியமிக்குமாறு அரசாங்கத்தை கேட்டுக் கொள்கின்றோம்.

எமது தொழிற்சங்கம் வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆளுநர்களால் பாதிக்கப்பட்டிருக்கின்றது. முன்னாள் ஆளுநர் ரோகித போகல்லாகம போன்றோர் சர்வாதிகாரமாக எமது மாகாணத்தில் ஆட்சி செய்திருந்தனர். நாங்கள் அவர்களுக்கு எதிராக குரல் கொடுத்தோம். மாகாண சபை நிர்வாகத்தை நாம் சிறந்த முறையில் கொண்டு செல்ல வேண்டும். மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் கூட மீள மத்திய அரசாங்கத் திடம் திரும்பிச் சென்றிருக்கின்றன. இதற்கு காரணம் இந்த மாகாணத்தை சேர்ந்த ஆளுநர்கள் சரியாக செயற்பட்டிருந்தால் வருகின்ற நிதியை சரியாக செலவு செய்திருப்பார்கள். வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசியல்வாதிகள் கடந்த காலத்தின் ஆளுநர்களின் இந்தச் செயற்பாடுகளைத் தட்டிக்கேட்கவில்லை. அரசியல்வாதிகள் இந்தத் தவறுகளை விட்டிருக்கின் றார்கள். எமது தொழிற்சங்கத்தையும் மக்கள் நித்திரை கொள்கின்ற சங்கம் என நினைக்கின்றார்கள். எமது உயிரைக் கூட துச்சமாக மதித்து கடந்த 32 வருடங்களாக வடக்குக் கிழக்கு மாகாண ஊழியர்கள் உத்தியோ கத்தர்களுக்காக நாம் போராடுகின்றோம் என்பதை மக் களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமது உயிர் இருக்கும் வரை மக்களுக்காக எமது சேவையை வழங்குவோம். இது அரசியல் நோக்கமல்ல மக்கள் சேவை மகேசன் சேவை என்பதே எமது நோக்கமாகும். இந்த அடிப்படையில் தான் வடக்கு, கிழக்கில் எமது தொழிற்சங்க செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம். பொலிஸ் காணி அதிகாரங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மறுக்கப்பட்டுள்ளதால் சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்ள முடியவில்லை. 13 ஆவது அரசமைப்பு சட்டத்துக்கு அப்பால் சென்று இந்த மாகாணத்துக்கு மாநில சுயாட்சியை பெற வேண்டும் என்பதே எமது விருப்பமாகும். இவ்வாறு செயற்படும் போது தான் இந்த மாகாணங்களை அபிவிருத்தி செய்ய முடியும். கடந்த 74 வருடங்களுக்கு முன்னர் விட்ட தவறுகளை புதிய அரசாங்கம் விடக் கூடாது. ஏனெனில் இந்த 74 வருடங்களாக அரசாங்கம் விட்ட தவறுகளால் தான் பிரபாகரன் போன்றவர்கள் ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

பிரபாகரன் ஏன் ஆயுதம் ஏந்தி போராடினார் என்பதை சகலரும் உணர வேண்டும். தமிழ் பேசும் எங்களுக்கு பல அநியாயங்கள் நடந்திருக்கின்றன. எங்களை நாங்கள் ஆளக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. இவ்வாறாக ஜனநாயக முறை மீறப்பட்டமையால் தான் பிரபாகரன் போன்றோர் உருவாகினார்கள். அவரது போராட்டம் நியாயமான போராட்டமாகவும் மக்கள் போராட்டமாகவும் இருந்ததை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வடக்கு கிழக்கை ஆளக்கூடிய நிர்வாகக்கட்டமைப்பைக் கேட்டுத்தான் அவர் போராடினார். அவர் தனிப்பட்ட முறையில் எதுவும் கேட்கவில்லை. மக்களுக்காகவே அவர் போராடினார். வடக்குக் கிழக்கு மக்களை ஆளக்கூடிய நிர்வாகத்தைத் தாருங்கள் என பிரபாகரன் அண்ணன் கேட்டார். அதில் என்ன தவறு உள்ளது. சேனநாயக்க முதல் கோட்டாபய வரையிலான ஆட்சியாளர்கள் விட்ட தவறால் தான் சிறுபான்மை மக்கள் சின்னாபின்னமாகி உள்ளனர். புதிய அரசாங்கம் 74 வருடங்களாக விட்டிருந்த தவறுகளை விட வேண்டாம். இன்று கூட சிங்கள மக்கள் இதனால் தான் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள். தமிழ் மக்களின் கடந்த காலப் போராட்டம் நியாயமானது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

அன்று பிரபாகரனின் போராட்டம் பிழையானது எனக் கூறிய சிங்கள மக்கள் இன்று அது சரியானது என்பதை உணர்ந்திருக்கின்றார்கள். கடந்த 74 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் மக்களை ஏமாற்றினார்களே அன்றி மக்களின் நலனுக்காகச் செயற்படவில்லை என்பதை மக்கள் அறிவார்கள். அரசியல்வாதிகள் விடுகின்ற தொடர்ச் சியான தவறுகளால் மக்களால் ஜீரணிக்க முடியாதுள் ளது. இன்று டீசல் மண்ணெண்ணெய் எரிவாயு உள்ளிட்ட பலவற்றைப் பெறுவதற்கு சிரமப்படுகின் றனர். மக்கள் வாழக்கை சுமையைத் தாங்க முடியா தவர்களாக இருக்கின்றார்கள். மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் ஊடகவியலாளர்களை அடக்கி ஆளப்பார்க்கின்றார்கள். இவையெல்லாம் ஜனநாயக விரோதமான செயற்பாடுகளாகும். எனவே தான் கடந்த காலத் தவறுகளை மறந்து தமிழ் முஸ்லிம் சிங்கள மக்கள் இனியாவது ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும். – என்றார்.

# ரணில் செயற்படுத்துகின்ற சட்டரீதியிலான நடவடிக்கைகளே போராட்டக்காரரை மக்கள் காக்கவேண்டுமென கோரகாரணம்!

## இவ்வாறு போட்டுத் தாக்குகிறார் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா

போராட்டக்களச் செயற்பாட்டாளர்களை மக்கள் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று சிலர் கோரிக்கை முன்வைக்கக் காரணம் களச் செயற்பாட்டாளர்கள் மீது ரணில் செயற்படுத்துகின்ற சட்டரீதியான நடவடிக்கைகளும் அவர் மக்களுக்கு விடுத்த கோரிக்கைளும் போராட்டக்காரர்களை பாசிஸ்ட்டுகளாகச் சித்திரித்து மேற்கொண்ட பிரசாரமும் இப்போது அதிகாரத்தை அவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கும் மிகக்கவனமான வழிமுறைகளும்தான்.

– இவ்வாறு ஊடக அறிக்கை ஊடாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா. அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு–

இலங்கை அரசியல் புதியதொரு போராட்டக்களத்தைக் கண்டது. அந்தப் போராட்டக் களத்தின் நாயகர்களாக மாற்றத்தை விரும்பும் இளைஞர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு மக்கள் பக்கபலமாக இருப்பதற்கு ஏதுவான காரணிகளை இந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட வாழ்க்கைச் சுமையும் கஷ்டமும் இலகுவாகச் செய்து கொடுத்தன.

மக்கள் எதிர்கொண்ட வாழ்வியல் நெருக்கடியின் குரலாகப் போராட்டக்களத்தின் இளைய தலைமுறை மாறியது. அவர்கள் மீது திணிக்கப்பட்ட அரசியல் வன்முறை முழு நாட்டிலும் அதில் ஈடுபட்டவர்களின் சொத்துகளை அழித்து உயிரைப் பறிக்கும் அளவுக்கு எதிர்பாராத திருப்பத்தை உண்டுபண்ணியது. அத்தோடு காலாகாலமாக இருந்து வந்த இலங்கை அரசியல் கலாசாரம் முதன் முறையாக மக்கள் எழுச்சியின் மீது அச்சங்கொண்டது. எல்லாவற்றையும் அடக்கி வாசிக்கத் தொடங்கியது.

போராட்டக்களத்தின் கர்த்தாக்கள் அரசியல் வாதிகளின் ஒட்டுமொத்த பார்வையும் விழத்தக்க இடத்தில் இருக்கத் தொடங்கினார்கள். சில அரசியல் வாதிகள் தமது அரசியல் இருப்பின் மீது ஏற்பட்ட அச்சம் காரணமாக போராட்டக்களத்து இளைஞர்களுக்கு வெளிப்படையான ஆதரவை வழங்கிடும் அளவுக்கு நிலை மாற்றமடைந்தது.

இந்நாட்டின் பிரதமர் பதவி விலகினார். அந்த இடைவெளியில் ரணில் ஆட்சிக்கு வந்தமர்ந்தார். ரணிலுக்கு எதிராக எதிர்க்கட்சி அரசியல் வலுப்பெற்றது. பிரதான எதிர்க்கட்சியில் சிறுபான்மை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய எல்லாக்கட்சித் தலைவர்களும் ரணிலுக்கு எதிராக பகிரங்கமாகவே குரல் எழுப்பினார்கள். ரணில் போராட்டக்களத்தில் நின்ற இளைஞர்களுக்கு ஆதரவாக அப்போது குரல் கொடுத்தார். வலுப்பெற்ற போரட்டம் இறுதியில் ஜனாதிபதியைப் பதவி விலகச் செய்தது. அந்த இடைவெளியில் ரணில் தனது நிறைவேறாமல் இருந்த ஜனாதிபதிக் கனவை நிறைவேற்றிக்கொள்ள போராட்டக்கள இளைஞர்களின் செயற்பாடு களமமைத்துக்கொடுத்தது. போராட்டக்கள இளைஞர்களின் ரணிலுக்கு எதிரான குரல் ரணிலின் போக்கில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

இப்போது அதிகாரத்தின் உச்ச இருக்கையில் நிறைவேற்று ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அமர்ந்திருக்கின்றார். தற்பொழுது எதிர் அணியினருடன் சர்வகட்சி அமைச்சரவைக்கான பேச்சுகளும் அணுகுமுறைகளும் இடம்பெற்று வருவதைக் காணமுடிகிறது. சர்வகட்சி அமைச்சரவை அமைக்கப்படும் பொழுது பொதுஜன முன்னணியின் ஆதிக்கமே அங்கு காணப்படும் என்பதை நன்கு தெரிந்து கொண்டு அவருக்கு எதிராகக் குரல் கொடுத்த மைத்திரிபால சிறிசேன, விமல் வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க மற்றும் சிறுபான்மைக் கட்சிகளின் தலைமைகள் எல்லாவற்றையும் மறந்து இப்போது தங்களது எதிர்ப்பை விலக்கிக் கொண்டு இணக்கமாக ஐக்கியமாக ரணிலின் தலைமையிலான சர்வகட்சி ஆட்சியில் அமைச்சுப் பொறுப்பைப்பெற தயாராகின்றனர். அதேவேளையில். அமைச்சுப் பொறுப்பைப் பெற்றுக்கொள்ள விருப்பம் இருந்தாலும் கட்சியின் கொள்கை என்ற அடிப்படையில் நியாயப்படுத்த வார்த்தைகள் சிக்காததால் ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள்அமைதி காக்கின்றனர்.

ரணிலுக்கு எதிராக கடைசியில் மக்களுக்கான போராட்டக்களச் செயற்பாட்டாளர் இந்த அனைத்து அரசியல் வாதிகளாலும் கைவிடப்பட்டுள்ளார்கள்.

போராட்டக்களச் செயற்பாட்டாளர்களை மக்கள் பாதுகாக்க முன்வரவேண்டும் என்று சிலர் கோரிக்கை முன்வைக்கக் காரணம் களச் செயற்பாட்டாளர்கள் மீது ரணில் செயற்படுத்துகின்ற சட்டரீதியான நடவடிக்கைகளும் அவர் மக் களுக்கு விடுத்த கோரிக்கைகளும் போராட்டக்காரர்களை பாசிஸ்ட்டுகளாகச் சித்திரித்து மேற்கொண்ட பிரசாரமும் இப்போது அதிகாரத்தை அவர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கும் மிகக்கவனமான வழிமுறைகளும்தான். எல்லா அரசியல்வாதிகளும் எல்லாப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் மறந்து தமக்குள் ஐக்கியமாகத் தொடங்க மீண்டும் மக்கள் தோற்றுப் போகத் தொடங்கியிருக்கின்றார்கள். ஏனெனில் மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் அப்படியே இருக்கின்றன. மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் சிறையில் அடைபடும் பொழுது அவர்களுக்காகக் குரல் கொடுக்க யாருமில்லாது போக அவர்களுக்கு ஆதரவு தெரிவித்த ரணில் எதிர்ப்பு அரசியல்வாதிகள் ரணிலின் விருந்துபசாரத்தில் கை நனைத்திருப்பார்கள். இதுதான் அரசியல் என்பதைப் புரிந்து கொள்ள இன்னும் எத்தனை விதமான நிகழ்வுகளை மக்கள் கடந்து போக நேரிடும் எனத் தெரியாது. – என்றுள்ளது.

# கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் மதிப்பீட்டின் பிரகாரம் ஜூலையில் உயர்வடைந்தது பணவீக்கம்!

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் பணவீக்கம் கடந்த ஜூலை மாதம் 60.8 சதவீதமாகக் கணிசமானளவால் உயர்வடைந்திருக்கின்றது.

இந்தப் பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்தில் 54.6 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது ஜூலை மாதம் 6.2 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருக்கின்றது.

கடந்த ஒருமாதகாலத்தில் பால்மா, உடன்மீன், அரிசி உள்ளிட்ட உணவுப்பொருள்கள் மற்றும் போக்குவரத்து, நீர், மின்சாரம், எரிவாயு கட்டணங்கள் போன்ற உணவல்லாப்பொருள்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இந்தப் பணவீக்க உயர்விற்குப் பிரதான காரணமாக அமைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியின் தொடர்ச்சியாகப் பணவீக்கம் மிகவேகமாக அதிகரித்துச்செல்கின்றது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் மதிப்பீட்டின் பிரகாரம் பணவீக்கம் கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதம் சடுதியான அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது.

குறிப்பாக உணவு மற்றும் உணவல்லாப் பொருள்களின் மாதாந்த விலையதிகரிப்பு பணவீக்கம் உயர்வடைவதற்கான முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி கடந்த ஜூன் மாதம் 80.1 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவுப் பணவீக்கம் ஜூலை மாதத்தில் 90.9 சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும், ஜூனில் 42.4 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் ஜூலையில் 46.5 சதவீதமாக உயர்வடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

பால்மா, அரிசி மற்றும் உடன்மீன் உள்ளிட்ட உணவுப்பொருள்களின் விலைகளில் கடந்த மாதம் கணிசமானளவிலான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதாகவும், உணவல்லாப்பொருள்களைப் பொறுத்தமட்டில் போக்குவரத்து, உணவகம், விடுதிகள், வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு ஏனைய எரிபொருள்கள் ஆகியவற்றின் விலைகள் மற்றும் கட்டணங்கள் உயர்வடைந்தன எனவும் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, உணவு மற்றும் உணவல்லாப் பொருள்களின் விலைகளைப் பொறுத்தமட்டில், அவற்றில் முறையே 2.31 சதவீதம் மற்றும் 2.20 சதவீதம் என்ற அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மாதாந்த மாற்றம் கடந்த ஜூலையில் 4.51 சதவீதமாகப் பதிவாகியது.

இந்தக் கணிப்பீட்டின்படி பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 39.9 சதவீதமாகப் பதிவாகியிருந்த போதிலும், அது ஜூலை மாதம் 44.3 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை, ஜூன் மாதம் 13.3 சதவீதமாகப் பதிவான ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் ஜூலையில் 16.7 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய கடந்த 6 மாதகாலப் பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாகக் கணிப்பிடப்பட்ட பணவீக்கம் முறையே 14.2, 15.1, 18.7, 29.8, 39.1, 54.6 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், இது ஜூலை மாதத்தில் 60.8 சதவீதமாக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வகட்சி அரசாங்கம் நகைச்சுவையாக மாறிவிட்டது என்கின்றார் பொன்சேகா

சர்வகட்சி அரசாங்கம் என்ற பேச்சுக்கள் தற்போது நகைச்சுவையாக மாறியுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பிரதமருக்கு அதிகாரங்களை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்த நிலையில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து 19 ஆவது திருத்தத்தை மீண்டும் இந்த அரசாங்கம் கொண்டுவருமா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக சரத் பொன்சேகா கூறினார்.

ஆகவே சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்துகொள்வதில் சிக்கல் காணப்படுவதாகவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சுட்டிக்காட்டினார். தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்த முடியாது என்றும் அதற்குப் பதிலாக புதிய சக்தி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

## இலங்கை மின்சார சபைக்கு மறுசீரமைப்பு அவசியமாம்!

### காஞ்சன கூறுகிறார்



இலங்கை மின்சார சபைக்கு மறுசீரமைப்பு தேவை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்திலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய முன்மொழிவின் கீழ், மின்சார சபை, உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் விநியோகம் என தனிப்பிரிவுகளாக செயற்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

மீள்புதுப்பிக்கத்தக்க சக்தியுடன் உற்பத்தி செலவைக் குறைக்கும் திட்டமாக இந்த நடைமுறை முன்னெடுக்கப்படவுள்ளது.

## பொருளாதார நெருக்கடியால் நாட்டில் விபச்சாரம் அதிகரிப்பு

மிகமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கை ஆடைத்தொழிற்துறையில் வேலைவாய்ப்பை இழந்த பெண்கள் விபச்சாரத்துக்குள் தள்ளப்பட்டுள்ளதால் அதன் பெண்கள் தொடர்பில் இன்னுமொரு நெருக்கடியை எதிர்கொள்கின்றது என ஏ.என்.ஐ. செய்தி வெளியிட்டுள்ளது.

ஆடைத்தொழிற்துறையில் வேலைவாய்ப்பை இழந்த பெண்கள் வருமானத்துக்காக விபச்சாரத்திற்குள் நுழைகின்றனர் என ஏ.என்.ஐ. தெரிவித்துள்ளது.

2 கோடியே 20 லட்சம் மக்களைக் கொண்ட இலங்கை முன்னர் ஒருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில் இலங்கை மக்கள் கடும் நெருக்கடியையும் பட்டினி அபாயத்தையும் எதிர்கொள்கின்றனர்.

தற்போதைய சூழ்நிலையால் உண்டான நெருக்கடி பல குடும்பங்களை வாழ்வின் விளிம்பிற்கு தள்ளியுள்ளது. பெருமளவு இலங்கையர்கள் தங்கள் குடும்பங்களைக் கவனிப்பதில் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். உணவையும் அத்தியாவசிப்பொருள்களையும் பெறுவதில் அவர்கள் நாளாந்த பிரச்சினைகளைச் சந்திக்கின்றனர்.

இந்த மோசமான நிலைமை நாட்டில் புதிய விபச்சார விடுதிகள் உருவாகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. வாழ்வாதாரத்துக்காக பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபட வேண்டிய நிலையேற்பட்டுள்ளதால் கடந்த சில மாதங்களாக விபச்சாரம் 30 வீதமாக அதிகரித்துள்ளது என பாலியல் தொழிலாளர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் ஸ்டான்ட் ஒவ் மூவ்மென்ட் லங்கா தெரிவித்துள்ளது.

இந்த விபச்சார விடுதிகளில் சில ஸ்பாக்கள் போல இயங்குகின்றன.

தங்கள் குடும்பத்துக்கு மூன்றுவேளையும் உணவு வழங்குவதற்கு இதுவே ஒரே வழியாக உள்ளது என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆடைத்தொழிற்சாலைகளில் தொழில்புரிந்த பெண்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட பின்னர் பாலியல் தொழிலில் ஈடுபடுகின்றனர் என அசிலா தந்தெனிய ஏ.என்.ஐக்கு தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியால் பல பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுவதை நாங்கள் அவதானித்துள்ளோம். அநேகமானவர்கள் ஆடைதொழிற்துறையை சேர்ந்தவர்கள். கொவிட் காரணமாக ஆடை தொழில்துறை பாதிக்கப்பட்டது. பலர் வேலை இழந்தனர். தற்போதைய நெருக்கடி வாழ்வாதாரத்துக்காக பாலியல்தொழிலில் ஈடுபடவேண்டிய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

21 வயது ரெஹான (பெயர்மாற்றப்பட்டுள்ளது) தனது நிலை தொடர்பில் ஏஎன்ஐக்கு இவ்வாறு தெரிவித்தார். ஆடைத்தொழிற்சாலையில் தொழில்புரிந்த தான் எவ்வாறு பாலியல் தொழிலாளியாக மாறினேன் என்பதை அவர் விவரித்தார்.

ஏழு மாதங்களுக்கு முன்னர் தனது தொழிலை இழந்த அவர் பல மாத இயலாமையின் பின்னர் பாலியல் தொழிலாளியாக மாறியுள்ளார்.

கடந்த டிசெம்பரில் ஆடைத்தொழிற்சாலையில் நான் எனது வேலையை இழந்தேன். அதன் பின்னர் நாளாந்த அடிப்படையில் இன்னொரு தொழில் புரிந்தேன், ஆட்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் நான் வேலைக்கு செல்வேன், ஆனால் தொடர்ச்சியாக வேலை இல்லாததன் காரணமாக என்னால் உரிய வருமானத்தை பெறமுடியவில்லை கிடைத்த வருமானமும் எனது குடும்பத்தை பராமரிக்க போதுமானதாகயில்லைஇ பின்னர் ஸ்பா உரிமையாளர் என்னை அணுகினார் தற்போதைய நெருக்கடியால் நான் பாலியல் தொழிலாளியாக மாற தீர்மானித்தேன். அவர் விடுத்தவேண்டுகோளை எனது மனம் ஏற்க மறுத்தது ஆனால் எனது குடும்பத்திற்கு பணம் தேவைப்பட்டது என அவர் தெரிவித்தார்.

பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் 41 வயது ரோசியும் ஒருவர் (பெயர் மாற்றம்), ஏழு வயது பிள்ளையின் தாயான அவர் விவகாரத்து பெற்றவர். தற்போது பிள்ளையின் கல்விக்காக இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக வருமானம் போதுமானதாக இல்லை. எனது குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பணம் போதுமானதாக யில்லை. இதன் காரணமாகவே நான் இதனைத் தெரிவு செய்தேன். நான் கடையொன்றை நடத்துகின்றேன். அதனை தொடர்ந்து நடத்துவதற்கு பணம் செலுத்தவேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

மாதாந்தம் 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை உழைத்த பெண்கள் தற்போது நாளாந்தம் அதே பணத்தை உழைக்கின்றனர் இதுவும் அவர்கள் இந்த தொழிலை தெரிவு செய்வதற்கு ஒரு காரணம். ஆனால் அவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

## பல ஹோட்டல்களின் முன்பதிவுகள் இரத்து!

சுற்றுலாப் பயணிகள் முன்பதிவு செய்த ஹோட்டல்களில் சுமார் 45 வீதம் இரத்து செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் போராட்டங்கள், எரிபொருள், எரிவாயு மற்றும் மின்சார நெருக்கடிகளும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவதற்கு காரணமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

மேலும் இந்நிலைமை இந்நாட்டின் சுற்றுலாத் துறையில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

## ஜூலை மாத பணவீக்கம் 60.8 வீதம் ஆக உயர்வு!

இலங்கையின் பணவீக்கம் இந்த மாதத்தில் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளதை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்து உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமை காரணமாக இலங்கையின் பணவீக்கம் அதிகரித்துள்ளது.

நுகர்வோர் விலைகள் ஒரு வருடத்துக்கு முன்பு இருந்ததை விட 60.8 வீதம் அதிகரித்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் போக்குவரத்து செலவுகள் 143.6 வீதம் அதிகரித்ததாகவும், உணவு விலைகள் 90.9 வீதம் அதிகரித்ததாகவும் அந்தத் தரவுகள் காட்டுகின்றன.

# நுட்பியல் அவத்தை நீடிக்கப்பட்ட யதார்த்தம்


ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

நுட்பியல் அவத்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக எமது வாழ்வை மாற்றி வருகிறது. ஆனால், நாமோ மீண்டும் சைக்கிள்களுக்கும், விறகு அடுப்பிற்கும்,வண்டிலுக்குமாக வாழ்க்கைப் படகின் சுக்கானை திருப்பிப்பிடித்து பின்னோக்கி பயணிக்கின்றோம்.

ஆனால்,2030 மற்றும் அதற்குப் பிறகு நம் உலகில் வாழ்வதும் வேலை செய்வதும் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தால் எமது பயணம் எவ்வளவு தூரம் பின்னோக்கி செல்கிறது என்பது எமக்குப் புரியும். எதிர்காலம் இயல்புவாழ்வும் மெய்நிகர் உலகங்களை ஒன்றிணைக்கக்கூடிய அதிவேக தொழில்நுட்பங்களால் ஆட்கொள்ளப்பட போகிறோம். இதனை நீடிக்கப்பட்ட யதார்த்தம் (XR) என்கிறார்கள். நீங்கள் உண்மையில் உள்ளதைப் போலவே உலகில் எங்கும் ஒரு புதிய வீட்டை வாங்க முடியும் அல்லது தொலைதூர நிலத்தில் மதிய உணவுக்குச் கணப்பொழுதில் செல்ல முடியும். இது நம்பக்கடினமான ஒரு விடயம். அதாவது 2030 ஆம் ஆண்டு நமது வாழ்க்கையின் யதார்த்தங்கள் நம் கற்பனைக்கு எட்டாதவை என்று அர்த்தம் கொள்ளலாம்.

Extended Reality (எக்ஸ்.ஆர்) என்பது அனைத்து அதிவேக தொழில்நுட்பங்களுக்கும் ஒரு வளர்ந்து வரும்குடைச்சொல்லாகும். இன்று நம்மிடம் ஏற்கனவே உள்ளவை – ஆக்மென்டட் ரியாலிட்டி (ஏ.ஆர்), விர்ச்சுவல் ரியாலிட்டி (விஆர்) மற்றும் மிக்ஸ்டு ரியாலிட்டி (எம்ஆர்) மற்றும் இன்னும் உருவாக்கப்பட வேண்டியவை. அனைத்து அதிவேக தொழில்நுட்பங்களும் மெய்நிகர் மற்றும் 'உண்மையான' உலகங்களைக் கலப்பதன் மூலம் அல்லது முழுமையாக மூழ்கும் அனுபவத்தை உருவாக்குவதன் மூலம் நாம் அனுபவிக்கும் யதார்த்தத்தை விரிவுபடுத்துகின்றன.

### ஆக்மென்டட் ரியாலிட்டி (ஏ.ஆர்)
### Augmented Reality) (AR)




ஏ.ஆர். கண்ணாடிகள் மூலமாகவோ அல்லது திரைகள், டேப்லெட்டுகள் மற்றும் ஸ்மார்ட்போன்கள் மூலமாகவோ அனுபவத்தை அணுகலாம். இதன் பொருள் பயனர்கள் நிஜ உலகில் இருந்து தனிமைப்படுத்தப்படவில்லை, இன்னும் தொடர்பு கொள்ளலாம் மற்றும் அவர்களுக்கு முன்னால் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம். ஏ.ஆர். இன் மிகவும் பிரபலமான எடுத்துக்காட்டுகள் – Pokémon GO புழு கேம் ஆகும்.

### விர்ச்சுவல் ரியாலிட்டி (வி.ஆர்)
### Virtual Reality (VR)

ஆக்மென்ட்டட் ரியாலிட்டிக்கு மாறாக, விர்ச்சுவல் ரியாலிட்டி அனுபவத்தில், பயனர்கள் முழுமையாக உருவகப்படுத்தப்பட்ட டிஜிற்றல் சூழலில் மூழ்கியிருக்கிறார்கள்.தனிநபர்கள்தங்கள்மூளையைமுட்டாளாக்கும் செயற்கை உலகத்தின் 360 டிகிரி காட்சியைப் பெற வி.ஆர் ஹெட்செட் அல்லது ஹெட் – மவுண்ட் டிஸ்ப்ளே வைக்க வேண்டும். வி.ஆர் டெவலப்பர்கள் உருவாக்கப்பட்டதும். கேமிங் மற்றும் கேளிக்கை தொழில் அதிகம் பயன்பெற்றது. இருப்பினும், சுகாதார சேவை, கட்டுமானம், பொறியியல், இராணுவம் மற்றும் பல தொழில்களில் உள்ள நிறுவனங்கள் வி.ஆர். மிகவும் பயனுள்ளதாக இருப்பதைக் கண்டறிந்துள்ளன.



### கலப்பு உண்மை (எம்.ஆர்)
### Mixed Reality (MR)

கலப்பு யதார்த்தத்தில், டிஜிற்றல் மற்றும் நிஜ – உலகப் பொருள்கள் இணைந்து உள்ளன மற்றும் நிகழ்நேரத்தில் ஒன்றோடு ஒன்று தொடர்பு கொள்ளலாம். இது சமீபத்திய அதிவேக தொழில்நுட்பம் மற்றும் சில நேரங்களில் ஹைப்ரிட் ரியாலிட்டி என்று குறிப்பிடப்படுகிறது. இதற்கு மைக்ரோசாப்டின் HoloLens ஒரு சிறந்த உதாரணமாகும்.

நீடிக்கப்பட்ட யதார்த்தத்தில் நுட்பியல் அவத்தை வாடிக்கையாளர்கள் வாங்குவதற்கு முன் அது தொடர்பான பயிற்சி செய்யும் திறனை வழங்குகிறது. கைகடிகார உற்பத்தியாளர் ரோலக்ஸ் ஏ.ஆர். பயன்பாட்டைக் கொண்டுள்ளது, இது உண்மையான மணிக்கட்டில் கடிகாரங்களை கட்டிப்பார்க்க அனுமதிக்கிறது, மேலும் தளபாடங்கள் விற்பனை நிறுவனமான IKEA வாடிக்கையாளர்களுக்கு தங்கள் ஸ்மார்ட்ஃபோன் மூலம் தளபாட பொருள்களை தங்கள் வீட்டிற்குள் வைக்கும் திறனை வழங்குகிறது.

இந்த நீடிக்கப்பட்ட யதார்த்த நுட்பியல் வாழ்க்கைக்குத்தேவையான அனைத்து அனுபவத்தைக் கொடுக்கமுடியும். தொலைதூரத்தில்பணியாற்றும் இரு தரப்பினரும் ஒரே அறையில் இருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்த இந்த நுட்பியல் உதவும்.

ஆக, இந்த நுட்பியல் அவத்தைக்குள் செல்லும் போது முதலில், ஒருவர் என்ன செய்கிறார், எதைப் பார்க்கிறார், அவரின் உணர்ச்சிகளைப் பற்றிய மிக விரிவான மற்றும் தனிப்பட்ட தரவை எந்த நேரத்திலும் சேகரித்து செயலாக்குகிறது, இது பாதுகாப்பானதா? இந்த நுட்பியல் சாதனங்கள் எப்போதும் இணைக்கப்பட்டதாகவும், புத்திசாலித்தனமாகவும், அதிவேகமாகவும் இருப்பது அவசியம். இதில் டிஸ்பிளே, பவர் மற்றும் தெர்மல், மோஷன் டிராக்கிங், கனெக்டிவிட்டி மற்றும் பொதுவான வெளிச்சம் போன்றவற்றை உள்ளடக்கிய ஆனால் தீர்க்கப்பட வேண்டிய முக்கியமான தொழில்நுட்ப மற்றும் வன்பொருள் சிக்கல்கள் இதில் உள்ளன. ஏதிர்காலத்தில் நிஜ உலகத்தோடும் மெய்நிகர் உலகத்தோடும் கலந்துருகி வாழ்வதையோ நீடிக்கப்பட்ட யாதார்த்த தொழில்நுட்பம் எமக்கு தரப்போகிறது.

நீடிக்கப்பட்ட யதார்த்தத்தில், பல சென்சார்கள் மற்றும் ஆதாரங்களில் இருந்து அதிக அளவு உள்ளடக்கம் கிளவுடுக்கு மாற்றப்பட்டு, சாதனங்களுக்கு வழங்க வேண்டும். இது ஒரு ஜோடி பெரிதாக்கப்பட்ட கண்ணாடிகள், ஹெட்செட் அல்லது மொபைல் போனாக இருக்கலாம். இந்தத் தொடுபுள்ளிகள் வெவ்வேறு இடங்களில் இருக்கக்கூடும் என்பதால், இதைச் செய்வதற்கு அதிக பட்ச ஆழம், அகலம், பெரிய அலைவரிசைகள் கொண்ட அலைவரிசைகள் தேவை. ஆகவே 5ஜீ அலைவரிசை இந்த சவால்கள் அனைத்தையும் சமாளிப்பதை சாத்தியமாக்குகிறது.இங்கு, 5ஜீஅலைவரிசை நிறமாலையின் மூன்று பேண்டுகளில் வேலை செய்கிறது. மில்லிமீட்டர் அலைகள் எனப்படும் ஹை – பேண்ட் அதிர்வெண்கள் அதிவேக வேகத்தை வழங்குகின்றன.

ஆனால் அவை குறைந்த அளவிலான வரம்பைக் கொண்டிருப்பதால், அவை சிறிய பகுதிகளுக்கு ஏற்றவை. 600 மெகா ஹெர்ட்ஸ் குறைந்த – பேண்ட் அதிர்வெண்கள் அதிகபட்ச சிக்னல் ஊடுருவலை வழங்குகின்றன. இந்த தொழிலநுட்பம் பொழுதுபோக்கு துறையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப்போகிறது எனலாம். பொழுதுபோக்கு உலகிற்கு அதிவேக அனுபவங்களைக் கொண்டுவருகிறது, இது நுகர்வோர் நேரடி இசை நிகழ்ச்சிகள் மற்றும் நிகழ்வுகளை கிட்டத்தட்ட நேரடியாக அனுபவிக்க அனுமதிக்கிறது. விளையாட்டுத் துறையில்,எப்போதும் பிடித்த மைதானத்தில் பயிற்சி செய்யலாம். மேலும், வி.ஆர்.டென்னிஸ் பயிற்சியாளர் ஏ.ஐ பயிற்சியாளருடன் அசைவுகளைப் பயிற்சி செய்ய உதவுகிறது.

சந்தைப்படுத்தல் துறையில் நுகர்வோருடன் தொடர்புபடுவதற்கு புதிய வழிகளைத் திறந்துவிட்டன, 'அவர்கள் வாங்குவதற்கு முன் முயற்சிக்கவும்' என்ற உத்தியை இந்த தொழில்நுட்பத்தின் மூலம் செயல்படுத்துகிறார்கள். பொருள் வாங்குவதற்கு முன் பொருள்களை அனுபவிக்கவும் காட்சிப்படுத்தவும் முடியும். இதனால் தெளிவான கொள்முதல் முடிவை எடுக்க உதவுகின்றன.



மேலும், கல்விக்கான புதிய வழிகளைத் திறக்கிறது. கல்வியாளர்களுக்கும் பயிற்சியாளர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கிறது,மக்கள்தொலைதூரத்தில் படிப்புகளில் கலந்துகொள்ள முடியும். மருத்துவ மாணவர்களைப் பொறுத்தவரை, அவர்கள்மெய்நிகர்நோயாளிகளைப் பற்றியபயிற்சியைப்பெறலாம். அதே போல கட்டிடக் கலைஞர்கள் மற்றும் உள்கட்டுமாண வடிவமைப்பாளர்கள் தங்கள் வடிவமைப்புகளைஉயிர்ப்பிக்க இந்த நுட்பியல் அவத்தை உதவுகிறது.

# வழிகாட்டல்களை மீறினால் கடுமையான நடவடிக்கை!

## எச்சரிக்கிறது மத்திய வங்கி

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் அதன் சுமையை பொருளாதாரக் கட்டமைப்பு சார்ந்த அனைத்துத்தரப்பினரும் சமவளவில் தாங்கிக்கொள்ளவேண்டும்.

அதன்படி நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி நாமனைவரும்முன்நோக்கிப்பயணிப்பதைஇலக்காகக்கொண்டு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப்பரிமாற்றம் தொடர்பான வழிகாட்டல்கள், ஏற்றுமதி மட்டுப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதுடன் அவை உரியவாறு பின்பற்றப்படுகின்றதாவென உறுதிப்படுத்தப்படும்.

அதனைமீறி செயற்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்டத்தின் பிரகாரம் மிகவும் வலுவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்திருக்கின்றது.

இதுதொடர்பாகமத்தியவங்கியால்வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் விளைவாக நாட்டுமக்கள்மீதுஏற்பட்டிருக்கும்தாக்கத்தைக்குறைப்பதற்கு அரசாங்கமும் மத்திய வங்கியும் ஒன்றிணைந்து பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றன.

தற்போதைய நெருக்கடிக்கும், அது மேலும் தீவிரமடைவதற்கும் நாட்டின் வங்கிக்கட்டமைப்பில் திரவத்தன்மை கூடிய வெளிநாட்டுக்கையிருப்பின் அளவு மிகவும் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றமையே முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சி, எரிபொருள் உள்ளடங்கலாக அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நாட்டின் வங்கிக்கட்டமைப்பிடம் போதியளவிலான வெளிநாட்டுக் கையிருப்பு காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி ஏற்றுமதிகள் மூலமான வருமானத்துக்கு சில மட்டுப்பாடுகளை விதிக்கவேண்டிய நிலையிலிருக்கின்றது.

குறிப்பாக ஏற்கனவே மத்திய வங்கியால் ஏற்றுமதிகள், அதற்கான கொடுப்பனவுச்செலுத்துகைக் காலம் என்பன தொடர்பில் மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதன் மூலம் வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் முறைசாரா வழிமுறைகளைவிடுத்து, உரிமம்பெற்ற வங்கிகளின் ஊடாக வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும் இந்த வழிகாட்டல் மற்றும் மட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் வெற்றி என்பது வர்த்தக சமூகம் மற்றும் வங்கிக்கட்டமைப்பு ஆகியவற்றின் ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றிலேயே தங்கியிருக்கின்றது.

எது எவ்வாறெனினும் சந்தையின் சில தரப்பினர் இந்த வழிகாட்டல்களுக்கு அமைவாகச் செயற்படவில்லை என்ற விடயம் மத்திய வங்கியின் கவனத்துக்குக்கொண்டுவரப்பட்டிருக்கின்றது. மிகவும் கடினமானதொரு காலப்பகுதியில் அனைத்துத்தரப்பினரும் சமளவில் சுமையைத் தாங்கிக் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி நாட்டின் நலனை முன்னிலைப்படுத்தி நாமனைவரும் முன்நோக்கிப் பயணிப்பதற்கு வெளிநாட்டு நாணயப்பரிமாற்றம் தொடர்பான வழிகாட்டல்கள், ஏற்றுமதி மட்டுப்பாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுவதுடன் அவை உரியவாறு பின்பற்றப்படுகின்றனவாவென உறுதிப்படுத்தப்படும் என்பதை பொருளாதாரத்துடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் மீளவலியுறுத்துவதற்கு மத்திய வங்கி விரும்புகின்றது. அதனைமீறி செயற்படும் தரப்பினருக்கு எதிராக உரிய சட்டத்தின் பிரகாரம் மிகவும் வலுவான நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை பொருளாதார உதவித்திட்டமொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுகள் ஓரளவிற்கு முன்னேற்றத்தைக் காண்பிப்பதுடன் தகுதிவாய்ந்த சட்ட மற்றும் நிதி ஆலோசகர்களின் உதவியுடன் கடன்மறுசீரமைப்பு தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடிதங்கள் வருவதில் தாமதம் ஏற்படலாம்

## தபால் துறை தெரிவிப்பு

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடிதங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படக்கூடும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊழியர்கள்முறையாககடமைக்குச்சமுகமளிக்காதமையால் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, வெளிநாட்டு தபால் கட்டணங்களை எதிர்வரும் முதலாம் திகதி முதல் திருத்தியமைக்க தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

திருத்தப்பட்ட கட்டணங்கள் கடந்த 19ஆம் திகதி விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் பொருளாதார நெருக்கடியை அதிகார போட்டிக்காக பயன்படுத்துகின்றன!

## இந்தியா, அமெரிக்கா, சீனா மீது குற்றஞ்சாட்டுகிறார் திஸ்ஸ விதாரண



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாக செயற்படுத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர மக்கள் மிக மோசமான நெருக்கடியை எதிர்கொள்வார்கள்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இந்தியா,அமெரிக்கா,சீனா ஆகிய நாடுகள் தங்களின் அதிகார போட்டிக்காகப் பயன்படுத்திக் கொள்வதை நன்கு விளங்கிக்கொள்ள முடிகிறது என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் போராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வக்கட்சி அரசாங்கத்தில் ஒன்றிணையுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சகல அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஸ்தாபிக்கப்படும் சர்வக்கட்சி அரசாங்கத்தின் வியூகம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையிலான பேச்சை முன்னெடுப்பது அவசியமாகும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

நாணய நிதியத்தின் நிபந்தனைகளை முழுமையாகச் செயற்படுத்தினால் பொருளாதார ரீதியில் பாதிக்கபபட்டுள்ள நடுத்தர மக்கள் மேலும் மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை இந்தியா,சீனா மற்றும் அமெரிக்காக ஆகிய நாடுகள் தங்களின் அதிகாரப் போட்டிக்காக பயன்படுத்திக் கொள்வதை அவதானிக்க முடிகிறது. அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் சீனா தொடர்பில் இலங்கையில் தவறான கருத்துக்களைக' குறிப்பிடுகின்றன.

பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள பின்னணியில் அமெரிக்கா குறிப்பிட்டதை போன்று இலங்கைக்கு உதவி புரியவில்லை.

ஒத்துழைப்பிற்கான நிபந்தனைகளை மாத்திரம் தொடர்ந்து விதித்து வருவதை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படுவார் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். – என்றார்.

# அம்பாந்தோட்டை வரும் சீன இராணுவ கண்காணிப்பு கப்பல்; தெளிவுப்படுத்துமாறு இலங்கையைக் கோருகின்றது இந்தியா!

சீன இராணுவத்தின் கண்காணிப்பு கப்பலான யுவான் வோங் – 5 இன் இலங்கை விஜயம் தொடர்பில் டெல்லி கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதுடன் மேற்படி கப்பலின் வருகைக்கான காரணம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட காலப்பகுதியில் அதன் செயற்பாடுகள் என்பன தொடர்பாக முழுமையான தெளிவுப்படுத்தலை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோரியுள்ளது.

சீன இராணுவ கண்காணிப்பு மற்றும் ஆய்வு கப்பலின் வருகை இந்தியாவின் தேசிய பாதுகாப்பு விடயங்களில் நேரடியாகவே தாக்கம் செலுத்துகின்றமையால் இந்த விடயத்தில் முழுமையான அவதானத்துடன் இருப்பதாக கொழும்பிற்கு டெல்லி உயர் மட்டம் தகவல் அனுப்பியுள்ளது.

யுவான் வோங்– 5 இராணுவ கண்காணிப்பு கப்பல் எதிர்வரும் ஓகஸ்ட் 11 ஆம் திகதி இரவு 11 மணிக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தரவுள்ளது. ஜியாங்கியின் துறைமுகத்திலிருந்து கிழக்கு சீன கடல் ஊடாகவே யுவான் வோங் – 5 கப்பல் இலங்கை நோக்கியபயணித்தைஆரம்பித்துள்ளது. செயற்கைக் கோள் மற்றும் அதி நவீன செய்மதி தொழில்நுட்பத்தில் யுவான் வோங் – 5 கப்பல் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடியது.

சீனாவின்மிகநவீன செய்மதிகளைக்கண்காணிக்கும் கப்பலாக யுவான் வாங் – 5 குறிப்பிடப்படுகின்றது. மறுபுறம் செய்மதிகள் மற்றும் கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணைகள் செலுத்தப்படுவதைக் கண்காணிக்கும் திறன் உள்ளிட்ட பல்வேறு நவீன கண்காணிப்பு வசதிகளை இது கொண்டுள்ளது. சீன இராணுவத்தின் மூலோபாய படையணியே இந்தக் கப்பலை இயக்குவதாக அமெரிக்கா குறிப்பிட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனா தனது வெளிக்கள இராணுவத் தளமாகப் பயன்படுத்த கூடும் என்று பல்வேறு நாடுகள் இலங்கைக்கு எச்சரிக்கைகளை விடுத்திருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, இந்தியா கடும் அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தியுள்ளது. இலங்கை – இந்திய கடற்பரப்பை பொறுத்தவரையில் இரு தரப்புமே பரஸ்பர நன்மைகளின் அடிப்படையில் கையாளப்படுகின்றது. எனவே இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையிலான நகர்வுகள் இந்தக் கடல்பரப்பில் காணப்படுகின்றமையை ஏற்க முடியாது என இலங்கைக்கு டெல்லி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுன்னாகம் லயன்ஸ் கழகத்தால் உலருணவுப் பொதி வழங்கல்!





நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் மிகவும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 10 குடும்பங்களுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் உலருணவுப் பொதிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வழங்கிவைக்கப்பட்டன.

கனடாவில் உள்ள இந்தியன் றெஸ்ரோரன்ற் உரிமையாளர் சாம் அவர்களின் நிதியுதவியில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

நான்கு அங்கத்தவர்கள் கொண்ட ஒரு குடும்பத்துக்கு இரண்டு வாரங்களுக்குத் தேவையான ரூபா 12 ஆயிரம் பெறுமதியிலான உலருணவுப் பொதிகள் 10 குடும்பங்களுக்கு இவ்வாறு வழங்கப்பட்டன.

இந்த உலருணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வில் சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் க.டினேஸ், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினரும் சுன்னாகம் லயன்ஸ் கழககச் செயலாளருமான லயன் சி.ஹரிகரன், லயன் பா.மரியதாஸ் ஆகியோர் இணைந்து இந்த உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-79

### இராஜதந்திரங்களும் உளவு பார்த்தலும்

நடந்து முடிந்த இடைக்கால ஜனாதிபதிக்கான தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு அவர்களது நாடாளுமன்ற உறுப்பினர்களை டலஸ் அழகப்பெருமாவுக்கு வாக்களிக்கும் படி தீர்மானம் எடுத்ததும், அதற்கு ஆதரவாக சுமந்திரன் இந்தியத் தூதரகத்தின் அதிகாரி ஒருவருடன் பேசி அவர்கள் அவருக்குத்தான் வாக்களிக்க அறிவுறுத்துகிறார் என மற்றவர்களுக்



குத் தெரியப்படுத்தியதும் பெருமளவிலான செய்திகளாகி ராஜதந்திர வட்டாரங்களிலேயே பெரும் அதிர்வலர்களை ஏற்படுத்தி, கூட்டமைப்புக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளன.

இப்படியான பேச்சுக்கள் நடந்திருந்தாலும் பின்னர் பணம் கை மாறி. சிலர் ரணிலுக்கு வாக்களித்தனர் என்று பேசப்பட்ட கூற்று வதந்தியானாலும், அரசியல் பரப்பிலே அவை சாதாரணமானவை, சாணக்கியங்கள் என சிலாகிக்கப்படுவது உண்டு.

ஆகவே, புரட்சிகளில் – விடுதலைப் போராட்டங்களில் – அரசியலின் நீரோட்டங்களில் இறங்குபவர்கள் தங்களைச் சுற்றி, தங்களைச் சுழியில் மாட்டி, அன்றில் தாயங்களை உருட்டி, வீழ்த்தி விட ஏங்கிக் கொண்டே இருக்கும் ராஜதந்திரங்களையும்அவற்றுக்காகதேவையான உளவுகளையும், உறவுகளையும், அதற்காகப் பணியாற்றும் ஒற்றர்களையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அப்படி அறியாமல் அரங்கங்களுக்குள்ளோ அன்றில் அரசியல் நீராட நீர் நிலைகளுக்குள்ளோ இறங்குபவர்கள் பாசியில் விழுந்து, பரிதாபமான முடிவுகளைத் தேடிக் கொள்வது வழமை. உளவு பார்ப்பதில் எத்தனையோ வழிமுறைகள். அதில் உளவு பார்ப்பவரை உளவு பார்ப்பதற்கென்றே இன்னும் சிலர். அவர்களும் ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொருவருக்குக் கடமைப்பட்டு, ஒரு சம்பவத்தை ஒட்டி பலர் பல அபிப்பிராயங்களைக் கொண்டாலும், அதிகாரம் கொண்டவர்கள் எடுக்கும் முடிவில் எல்லாஉளவுத்தகவல்களும்கணிக்கப்படாது, சில முக்கியங்கள் இன்றி தூக்கி வீசப்படும்.

சிறிய நாடான ஸ்ரீலங்காவுக்கே அப்படியான பல உளவுக் கட்டமைப்புகள் உண்டு. சிலவற்றுக்கு மற்றொன்று செய்வது தெரிவதில்லை.

இராணுவத்தின் கைகளில், பாதுகாப்புச் செயலாளருக்கு மாத்திரம் கட்டுப்பட்டு, பாதுகாப்பு அமைச்சருக்கோ – ஏன் ஜனாதிபதிக்குக் கூட தெரியாத – கட்டமைப்புகள் தங்களது உளவுகளால் பல கொலைகளையும் காணாமல் ஆக்கப்படுதலையும் கச்சிதமாக முடித்தன. அப்படியானஉளவுத்துறைகள்துல்லியமாகப் புலம்பெயர் மக்களைக் கணிப்பதிலும் இயங்குகின்றன.

இந்தியாவின் உளவுத்துறையை (RAW) என்பதைப் பற்றி தமிழ் மக்களும் போராட்டக் குழுக்களும் அதனிடமிருந்த ராஜதந்திர உளவுகளை அறிந்தவை.

யானையைப் பார்த்த குருடர்கள், வாலையும், தும்பிக்கையையும், கால்களையும், வயிற்றையும் யானையாக நம்பிய மாதிரிதான் அவர்கள் அதனை முழுமையாக பார்க்கவில்லை, அறிந்து கொள்ளவில்லை, வெளியே காட்டப்பட்ட கைகளையும் தலைகளையும் கண்டு அவர்கள் சொல்லுவதுதான் என்ற எண்ணத்துக்கு வருகிறார்கள்.

பீடிகை இல்லாது பார்த்தால் இந்தியப் போராட்ட காலங்களில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பரிவர்த்தனை செய்த போது அவற்றை RAWதான் மேற்பார்வைசெய்தது. ஒவ்வொருகுழுவுக்கும் றோவின் ஒரு பகுதி மேய்ப்பனாக இருந்தது. பொதுவாக ஆயுதப் பரிவர்த்தனை நடக்கின்றது என்பது தெரிந்தாலும், ஒரு விடுதலை குழுவின் மேய்ப்பர்கள் மற்றவற்றை ஒட்டி நடக்கும் விடயங்களை அறிவதில்லை. அவை அவர்களுக்கு தரப்படுவதும் இல்லை. பல குழுக்கள் அழிந்ததும் வீழ்த்தப்பட்டதும் அப்படியான காலநிலைக்கேற்ற அரசியல் தீர்மானங்களால்தான்.

ஓர்உதாரணத்திற்குசொல்வதானால், ரெலோ இயக்கம் இந்தியாவுக்கு நேசமா



னதாகவும், அவர்களின் அரசியலை தமிழ் மக்களிடையே ஏற்று நடத்தும் என்றும் கருதியும் அவர்களின் தலைவர் சிறிசபாரத்தினம்ஒருசெல்லப்பிள்ளையாகப் பார்த்து ஆயுத ரீதியில் வளர்க்கப்பட்டார். பிரபாகரனின் விடுதலை புலிகள் அப்படி அல்லர். தொடக்கத்தில் இருந்தே ஓடும் புளியம்பழமும் போன்ற உறவையும் இடைவெளியையும் வைத்துத் தாங்கள் இந்தியாவை முற்றும் முழுதாக நம்பி ஆயுதங்களுக்காக அவர்களைத் தங்கி இருக்கக் கூடாது என தனது போராளிகளுக்கு பிரபாகரனும் அறிவுறுத்தி இருந்தார். அது அவரது மேய்ப்பர்களுக்கும் தெரிந்திருந்தது. அரசியல் மட்டங்களும் அறிந்திருந்தன


பெங்களூரில் நடந்த இரண்டாவது சார்க் மாநாட்டின் பின் எம்.ஜி.ஆருக்கு கூட தெரிவிக்காமல் பிரபாகரன் இலங்கை திரும்பியமைக்குஜ் காரணம், தான் அங்கு ஜே.ஆரின் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்தமை காரணங்களாகப் பார்க்கப்பட்டு, தொடர்ந்தும் இந்தியாவிலிருந்து கொண்டிருந்தால் றோவின் பிரிவுகளால் தனக்கு ஆபத்து வரும் எனக் கருதியே.

அதே சமயம் விடுதலைப் புலிகளை அந்நிப்படுத்தி, இந்திய அரசு மற்ற விடுதலை இயக்கங்களை வளர்த்து, தங்களை (புலிகளை) நாட்டில் பலவீனப்படுத்தலாம், ஆதலால் பேச்சுவார்த்தை மேசைகளில் பலத்துடன் அமருவதாயின் அந்தப் பலத்துக்காக விடுதலைப் புலிகள் ஏகோபித்த தலைமையாக வளர வேண்டும் என்பதுதான் அவரின் எண்



ணம். நாட்டுக்குத் திரும்பிய பிரபாகரன் மற்றைய குழுக்கள் இயங்குவதைத் தடை செய்தார். முக்கியமாக இந்தியாவுக்கு நெருக்கமாக இருந்த ரெலோவை அழித்து, அவர்களின் தலைவர் ஸ்ரீ சபாரத்தினத்தைக் கொலை செய்ய கிட்டு தேடித்திரிந்தபோது, சென்னையிலிருந்த ரெலோவின் அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் அவரை பாதுகாக்க வேண்டி, அவர்களின் மேய்ப்பாளர்களிடம் அழாத குறையாகக் கோரிக்கைகள் வைத்தார்கள். ஆனால் அது தங்களை மீறிய – மேற்பட்ட – விடயம், தங்களால் விடுதலைப்புலிகளின்மேற்ய்ப்பர்களிடம் அறிவுறுத்தல் மாத்திரம்தான் தரலாம் எனக் கை விரித்து விட்டார்கள். ரெலோவிற்கு தாங்கள் அறிந்தவர்களைத் தவிர, றோவின் மேல் மட்டத்திலோ, அன்றில் மற்றைய குழுக்களின் மேய்ப்பர்களிடமோ உத்தியோகபூர்வமான தொடர்புகள் இருக்கவில்லை. ஆகவே பிடித்திருந்த ஓலை சறுக்க அவர்களும் வீழ்ந்தார்கள். விடுதலை புலிகள் ஆழமாகவும் பலமாகவும் வளர்ச்சி அடைகிறார்கள், ஆகவே ஒன்றை வளர விட்டு அதனை அனுசரணையாக்குவது அன்றில் கட்டுப்படுத்துவது இலகுவாக இருக்கலாம், அப்படிக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான அளவுக்கு மற்றவர்கள் இருந்தால் போதும் என்ற விடுதலைப் புலிகளின் மேய்ப்பர்களின் அப்பொழுதைய உளவுகள், மதிப்பீடுகள் அந்தக் கால அரசியல் தீர்மானங்களுக்கு வழிவகுத்தன.

இப்படியாகத் தமிழ்நாட்டில் புளொட் இயக்கத்தின் மேய்ப்பர்களாக இருந்தவர்களின் கணிப்புக்களே அவர்கள் ஹொங்கொங்கிலிருந்து இருந்து பல கோடிரூபாபெறுமதியான ஆயுதங்களை இறக்குமதி செய்த போது அவை சுங்கப் பிரிவு மூலம் தடுக்கப்பட்டன. உமாமகேஸ்வரன் எவ்வளவோ முயற்சிகள்



செய்த போதும் அவை விடுவிக்கப்படவில்லை. ஆயுதங்கள் பெற முடியாத நிலையும்,பணமுடைகளும்இயக்கத்தை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள முடியாத நிலையில் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து இயக்கம் தேய்ந்தது. ராஜீவ் காந்தி வரைப் போயும் இந்த ஆயுதங்கள் விடுவிக்கப்படவில்லை. இவை கண்ணும் காதும் அறிந்த மாதிரி சென்னையிலேயே முடித்திருக்கப்பட வேண்டியவை.

இப்பொழுது அவை தடுக்கப்பட்டன என்று தெரிந்தும், தான் ஈடுபட்டு, தனது அனுமதியில் அவை (புளொட் கொண்டு வந்த ஆயுதங்கள்) விடுவிக்கப்பட்டால் பாரதூரமான இராஜதந்திரப் பின்னடைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்ற காரணங்களையே ராஜிவ கந்தி முன் வைத்தார்.

இந்திரா காந்தி தமிழரின் வன்முறை குழுக்களுக்கு ஆயுதங்களும் பயிற்சிகளும்கொடுக்கிறார்எனஆதாரங்களுடன் ஜே.ஆர் பேசியபோதும், இந்திராகாந்தி கடைப்பிடித்த இராணுவத் தந்திரப் போக்குகளை நோக்குதல் வேண்டும்.

அடுத்த சில மாதங்களில் அதே வழியில் விடுதலைப் புலிகளுக்கு கொள்கலன்களில் வந்த ஆயுதங்கள் முதலமைச்சரான எம்.ஜி.ஆரின் நேரடி பார்வையில் இறக்கப்பட்டு, அவர்களின் முகாம்களிலேயே கையளிக்கப்பட்டன.

போர் முடிந்து விட்டாலும் அரசியலுக்குத் தேவையான உறவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அதில் சித்தார்த்தனுக்கு ஒருவர். செல்வத்துக்கு இன்னொருவர். சுமந்திரனுக்கு வேறொருவர் என றோவினதும் ஸ்ரீலங்காவின் உறவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். அவற்றை அறிந்து புத்திசாதுரியமான முறைகளில் முடிவுகளை எடுக்க வேண்டுமே ஒழிய, ஒருவருடைய தகவல்கள் தான் நம்பிக்கையானவை என அவசரக்குடுக்கைகளாக ராஜதந்திர நகர்வுகளை போட்டு உடைக்க முயல்வது முட்டாள்தனம்.

போர்க்காலங்களில் கூட இந்த உறவுகளின் தன்மைகளையும் அவற்றின் தாக்கங்களையும் தமிழ்ப் போராட்ட குழுக்கள் கணக்கெடுக்காமையும், ஜே.வி.பி. தலைமைகள் அந்த ஈடுபாடுகளை அனுசரித்து போனமையையும் பார்க்கலாம். அதற்கு கேந்திரமாக இயங்கிய இந்தியாவின் தூதரகத்திற்கு போக வேண்டும்.

(வளரும்)